REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: கார்த்திகை 12உ புதன் (27—11—57) ★ ★ வெளியூர்: கார்த்திகை 13உ வியாழன் (28—11—57) [இதழ் 142

'தேசீய கீத'த்தில் 'சிந்து'— மக்கள் சபையில் கேள்வி-பதில்

புதுடில்லி, நவ. 26—

தாகூரின் 'தேசீயகீத'த்தில் வரும் 'சிந்து' அதிலிருந்து நீக்கப்படமாட்டாது என்று டெல்லி தெரிவித்துள்ளது.

இராமகிருஷ்ண ரெட்டி என்பார், மக்கள் சபையில், "'சிந்து' இப்போது இந்தியாவில் இல்லாததால், தாகூரின் 'தேசீய கீத'த்திலிருந்து அந்தச் சொல்லை எடுத்துவிடுவதுபற்றி சர்க்கார் பரிசீலித்ததா?" என்று கேட்டபோது, உள்நாட்டு மந்திரி தத்தார், பரிசீலித்தோம்; ஆனால் அந்தச் சொல்லை நீக்குவதாக உத்தேசமில்லை' என்று கூறியிருக்கிருர்.

மாநிலங்கள்மீது மத்திய ஆட்சியின் ஆதிக்கம்

அரிசி உண்ணுவோருக்கு நெருக்கடி!

இறக்குமதிக்கும் வழியில்லையாம்— உள்நாட்டிலும் பஞ்சமாம்!

மக்கள் சபையில் மந்திரி அபாயச் சங்கு

புதுடில்லி, நவ. 26—

அரிசி சாப்பிடுகிற மக்கள், வரப்போகிற ஆண்டில் மிகக் கஷ்டப்படவேண்டியிருக்குமாம்!

கையிருப்பில் உள்ள அரிசியும், இறக்குமதிக்கு ஏற்பாடாகியுள்ள அரிசியும் சில மாதங்களுக்கே வருமாம்!

கோதுமை தாராளமாகக் கிடைக்கிறதாம்; வெளிநாடுகளில்கூட அரிசி கிடைப்பது கஷ்டமாயிருக்கிறதாம்!

உ. பி., பீகார், மேற்கு வங்கம், ஒரிசா, மத்தியப் பிரதேசம், பம்பாய் முதலிய மாநிலங்களில் சுமார் 80,000 சதுரமைல் பரப்பிற்குப் பஞ்சம் பரவியிருக்கிறதாம்; இதனுல் நிலைமை மேலும் மோசமாகி வருகிறதாம்!

இவ்வாறெல்லாம் மக்கள் சபையில், உணவு மந்திரி ஜெயின் பேசியிருக்கிருர்.

தேவையான அளவு அரிசி முழுவதையும் மக்களுக்குத் தரமுடியும் என்ற நம்பிக்கை சர்க்காருக்கு இல்லையாம்!

இந்தச் சந்தர்ப்பத்தில், பெருஞ் செலவில் உருவான நீர்ப்பாசனத் திட்டங்கள் முழுப் பயனை அளிக்கின்றனவா என்று காணவும், சிறிய—பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை விரைவாக அமுல் செய்வதற்கான வழிகாணவுமாக இரு நிபுணர் குழுக்கள் நியமிக்கப்படும் என்றும் மந்திரி கூறியிருக்கிருர்.

கூட்டாட்சி என்னும்பேரால் அதிகாரங்களை டெல்லியில் குவிப்பதா?

எதேச்சாதிகாரப் போக்கை எதிர்த்துப் போராடவேண்டும்

காஞ்சியில் டாக்டர் ஏ. இராமசாமி எச்சரிக்கை

காஞ்சி, நவ. 25—

"அதிகாரங்களெல்லாம் மத்திய அரசாங்கத்திடம் குவிக்கப்படுவது ஒரு அரசியல் கட்சிப் பிரச்சினையல்ல; இந்தப் பிரச்சினை எல்லா மாநிலங்களையும் பொறுத்ததாகும். இப்படி அதிகாரம் ஓரிடத்தில் குவிக்கப்படும் முறையையும், போக்கையும் நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்"

—என்று, டாக்டர் ஏ. இராமசாமி (முதலியார்) நேற்று மாலை காஞ்சி நகராட்சி மன்றத்தில் தனக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் மாநிலங்கள் மீது மத்திய அரசாங்கம் ஆதிக்கம் செலுத்துவதைக் கண்டித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"எல்லா அதிகாரத்தையும் மத்திய அரசாங்கம் குவித்துக்கொள்வதில் தீவிரம் காட்டி வருகிறது. 'கூட்டாட்சி' என்னும் பெயரால், நாடு பூராவிலும் ஒரே ஆட்சி நடைபெறும் நிலைமை உருவாகி வருகிறது.

"மாநில அரசாங்கத்திற்கு சிறு சிறு கவளங்களை பிச்சை அளிப்பதுபோல அளித்து, ஆசைகாட்டிவிட்டு, மத்திய அரசாங்கம், தன்னிடத்தில் அதிகாரங்களைக் குவித்துக் கொள்ளும் மிகக் கேவலமான முறை வளர்ந்துவருகிறது!

"இந்திய அரசியல் சட்டத்தின் பல்வேறு பிரிவுகளின்கீழ் மாநிலங்களுக்கு நியாயமாக வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மத்திய அரசாங்கம் கட்டுப்படுத்தி, தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப மாநிலங்கள் இயங்கவேண்டும் என்ற முறையில் கட்டளைகளையும், சிபாரிசுகளையும், மறைமுக மிரட்டல்களையும் புரிந்துவருகிறது!

"அரசாங்கம் தவருகச் செல்லும்போது கண்டிக்க வேண்டியது எல்லோருடைய கடமையாகும்.

'மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்தின் அதிகாரங்களைத் தட்டிப் பறிப்பதைப்போல, மாநில அரசாங்கமும் உள்ளாட்சி மன்றங்களுக்கு அளிக்கப்பட்டிருந்த அதிகாரங்களைத் தட்டிப் பறிப்பதில் ஈடுபட்டுள்ளது. இந்தப் போக்கு மாற வேண்டும். உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரமும், பொறுப்பும் அளிக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் உள்ளாட்சி மன்றங்கள் மக்கள் மதிப்பை இழக்க நேரிடும்.

"முன்பைவிட தற்பொழுது மக்கள் ஒவ்வொருவரும் உரிய வசதிகளையும் வாழ்க்கை உரிமைகளையும் அதிக அளவில் பெற விழைகின்றனர்.

"நம்முடைய சுதந்தர அரசாங்கத்தை எதிர்த்துப் போராடுவது என்பது, அந்நியர் அரசாங்கத்தை எதிர்த்து முன்பு நடத்தப்பட்ட போராட்டம் போன்று அவ்வளவு எளிய காரியமல்ல. போராடி மக்களின் குடிஉரிமைகளை இப்போது காப்பாற்ற வேண்டியது மிகவும் அவசியமாகும்."

மேலும் அவர், காஞ்சி நகர மன்ற உறுப்பினர்கள் திறமையுடன், கடமையைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, திரு. பொன்னுசாமி முதலியார் அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்துவைத்தார்.

விழாவிற்கு காஞ்சி நகர மன்றத் தலைவர் திரு. வி. என். பெருமாள் தலைமை வகித்தார்.

விழாவில் அண்ணா அவர்களும் கலந்துகொண்டு, டாக்டர் இராமசாமி முதலியாரின் அறிவுரையை சென்னை அரசாங்கத்தின் கவனத்திற்கு உணர்த்தி, உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரம் தரப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திப் பேசினர்.

திரு. எ.கே. தங்கவேலர் நன்றி நவில, விழா முடிவுற்றது.

தாமோதர் திட்டம்

மேலும் 2000 பேர் வேலையிழப்பர்

மாற்றுவேலை தரப்படுமென உறுதிமொழி

கல்கத்தா, நவ. 25—

தாமோதர் திட்ட கார்ப்பரேஷனில் நடைபெறும் திட்டங்கள் முடிந்தவுடன் சுமார் 2000, பேர் வேலையிலிருந்து நீக்கப்படுவர் என்றும், இவர்களுக்கு மாற்றுவேலை தேடித் தர முயற்சிக்கப்படும் என்றும் கார்ப்பரேஷன் அறிவித்துள்ளதாம்.

"பத்தாயிரம் பேர் வேலையிழப்பர் என்று கூறப்படுவது சரியல்ல; இதுவரை வேலையிலிருந்து நீக்கப்பட்ட 3,000 பேரில், 400 பேர்களைத் தவிர எஞ்சியோருக்கு மாற்று வேலைகள் தேடித்தரப்பட்டன; 150 பேர் தாங்களாகவே வேறு வேலை தேடிக்கொண்டனர்"

என்றும் கார்ப்பரேஷன் கூறியுள்ளது.

மராட்டியத்தில் நேருவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

அநீதியைக் கண்டிக்க சமிதியின் திட்டம்

அவுரங்காபாத், நவ. 26—

பண்டித நேரு வரும் சனியன்று பிரதாப்கரில் சிவாஜியின் உருவச்சிலை ஒன்றைத் திறந்துவைக்கும்போது அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடத்துவது என்ற முடிவினை சம்யுக்த மாராட்டிய சமிதி மாற்றிக்கொள்ளவில்லை என்பதாக ஆச்சாரி ஆத்ரே என்ற சமிதி எம். எல். ஏ. தெரிவித்திருக்கிருர்.

ஆர்ப்பாட்டத்தில் மக்கள் சபை உறுப்பினர்களும், சட்டசபை உறுப்பினர்களும் பங்குபெறுவர் என்று கூறப்படுகிறது.

மாராத்தி மக்கள் தந்த ஒருமுகமான தீர்ப்பையும், அவர்களது விருப்பத்தையும புறக்கணித்துவிட்டு, இரு மொழி பம்பாய் மாநிலத்தை அவர்கள் மீது திணித்து அநீதி இழைத்திருப்பதைக் கண்டிப்பதே ஆர்ப்பாட்டங்களின் நோக்கம் என்றும் ஆத்ரே விளக்கியிருக்கிருர்.

அரசியல் சட்டப் புத்தக நகல்கள் சாம்பலாயின!

அவமதிப்புத் தடுப்புச் சட்டம் காற்றில் பறந்தது!

நாடெங்கும் ஆயிரக்கணக்கான திராவிடர் கழகத் தோழர்கள் கைது

சென்னை, நவ. 27—

'அரசியல் சட்டப் புத்தக நகல்களை எரிப்பது' என்ற பெரியார் அவர்களின் திராவிடர் கழகக் கிளர்ச்சியை ஒட்டி, நேற்று தமிழகம் முழுவதுமாக 1,600 தொண்டர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்று அதிகார வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கைது செய்யப்பட்டோரில் பெரும்பாலோர், சட்டப் புத்தகத்தை எரிக்குமுன்பே கைது செய்யப்பட்டுவிட்டனர் என்றும் எரித்ததற்காகக் கைதானவர்கள் சிலரே என்றும் தலைமைப் போலீஸ் அதிகாரி தெரிவித்திருக்கிருர்.

தஞ்சை மாவட்டத்தில் 915; திருச்சி 475; சென்னை 76; வடஆற்காடு 83; சேலம் 54; மதுரை 40; கோவை 29— என்று ஆக சுமார் 1,600 தொண்டர்கள் கைதாகியிருக்கின்றனர் என்று கணக்குத் தரப்பட்டிருக்கிறது.

சென்னையில் பல இடங்களில் இந்த எரிப்புக் கிளர்ச்சி நடைபெற்றது.

'பெரியார் நகரி'ல் (டிராம் ஷெட்) தோழர் எஸ். குருசாமி, மற்றும் இரு தோழர்கள் அரசியல் சட்டப் புத்தக நகலை எரித்த பிறகு கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

சட்டப் புத்தகத்தை எரித்தவர்கள்மீது மட்டுமே சமீபத்திய 'தேசிய கௌரவ அவமதிப்புத் தடுப்புச் சட்டத்'தின் கீழ் வழக்கு தொடரப்படும் என்றும் போலீஸ் அதிகாரி தெரிவித்திருக்கிருர்.

கிளர்ச்சியில், பல பெண்களும் ஈடுபட்டுக் கைதாகியுள்ளனர்.

கிளர்ச்சி, எந்தவித அசம்பாவித சம்பவங்களுமின்றி நடைபெற்றதாகவும் போலீஸ்-இன்ஸ்பெக்டர் ஜெனரல் கூறியிருக்கிருர்.

திருச்சியில் மட்டும் யாரோ இரண்டொருவர், சிலரது பூணூலை அறுத்ததாகவும், அவர்கள்மீது ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அந்தப் போலீஸ் அதிகாரி கூறியுள்ளார்.

★

சேலம் மாவட்டத்தில் 97 தி. க. தோழர்கள் கைது

சேலம், நவ. 26—

இந்திய அரசியல் சட்ட நகலைக் கொளுத்தியதாகவும், கொளுத்த முயன்றதாகவும் சேலம் நகர திராவிடர் கழகத் தலைவர் எம்.வி. சொக்கலிங்கம், செயலாளர் கே. பச்சமுத்து, சேலம் மாவட்ட திராவிடர் கழகச்செயலாளர் அழகரசன் உள்பட மொத்தம் 54 பேர்களை சேலம் நகரில் இன்றுமாலை போலீசார் கைது செய்தனர்.

சேலம் மாவட்டத்தில் இன்று நடுப்பகல்வரை முன்னெச்சரிக்கையாக 37 பேர்களையும், சட்டத்தைக் கொளுத்தியதாகவும், கொளுத்த முயன்றதாகவும் 6 பேர்களையும் போலீசார் கைது செய்தனர்.

சேலம் மாவட்டத்தில் இதுவரை சேலம் நகரம் உள்பட மொத்தம் 97 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ந. தி.)

★

நாகையில் 29 தி. க. தோழர்கள் கைது

நாகை, நவ. 26—

நாகையில் திராவிடர் கழகத் தோழர்களால் நடத்தப்பட்ட சட்ட புத்தக எரிப்பில் நகர திராவிடர் கழகத் தலைவர் எஸ். ஆர். ஆறுமுகம் உள்ளிட்டு 29 தோழர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். (ந. தி)

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 27—11—57 புதன்

இவையனைத்தும் அங்கே!

விவசாய நாடாக இருக்கின்ற வரையில் எந்த ஒரு நாடும் பொருளாதாரத் துறையில் முன்னேற முடியாது என்பது ஒப்பமுடிந்த உண்மை. விவசாய நாடாக மட்டுமே ஒரு நாடு இருந்துவருகின்றவரையில், அங்குள்ள மக்களின் வாழ்க்கைத்தரம் மிகமிகக் குறைந்ததாகவே இருந்துவரும் என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள உண்மையாகும்.

உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்துவிட்டபோதிலும், உணவுப் பொருட்களை பிறநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் அளவில் உற்பத்தி செய்தபோதிலும், குறிப்பிட்ட விவசாய நாடு செல்வச் செழுமையுடையநாடாக மதிக்க முடியாது என்பதை அனைவரும் அறிவர். விவசாயத்தை மட்டுமே நம்பி வாழும் நாட்டில் வறுமையும் வாட்டமும்தான் நிலைபெற்று இருக்கும் என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும்.

விவசாய நாட்டை வளமுள்ள நாடாக ஆக்கவும், அந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் சராசரி வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், பற்பல நவீனத் தொழில் அமைப்புகளை நிர்மாணிக்க வேண்டியது கட்டாயத் தேவையாகிறது. இவ்வழியைப் பின்பற்றித்தான் உலக நாடுகள் ஒவ்வொன்றும்—அது சிறிதாக இருந்தாலும் பெரிதாக இருந்தாலும்—தம் தம் நாட்டுச் செல்வத்தைப் பெருக்கிக் கொண்டிருப்பதுடன், தம்தம் மக்களின் சராசரி வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும் நூற்றுக்கு நூறு வெற்றி கண்டிருக்கிறது. உலக வரலாறு, இந்தப் பேருண்மையைத்தான் நமக்கு அறிவித்துக்கொண்டிருக்கிறது.

இப்பேருண்மையைத் தெளிவுபடத் தெரிந்துகொண்டுள்ளதின் விளைவாகத்தான் இந்தியப் பேரரசு முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைத் தீட்டி நிறைவேற்றிவைத்தது. அதுவுமன்றி, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தையும் செயல்படுத்த அப்பேரரசு முனைந்திருக்கிறது.

தொழில்களுக்கெல்லாம் தலை சிறந்ததாகவும், மூலத் தொழிலாகவும் இருந்துவருவது உருக்குத் தொழிலாகும் என்பதை மறுப்பதற்கில்லை. இம்முடிவை ஒப்புக்கொண்டதின் விளைவாகத்தான் இந்தியப் பேரரசும், பெருந்தொகை செலவில் வடநாட்டுப் பகுதிகளான ரூர்கேலா, பிலாய், துர்காபூர் ஆகிய மூன்று இடங்களிலும், மூன்று பெரிய உருக்குத் தொழிற்சாலைகளைத் துவங்கி இருக்கிறது.

மேற்குறிப்பிட்ட மூன்று பகுதிகளிலும் பெரும் உருக்குத் தொழிற்சாலைகளைத் துவங்கியுள்ளதற்கு இந்தியப் பேரரசு, அப்பகுதிகளில் உயர்தரமான இரும்புக் கனிப்பொருள் நிரம்பக் கிடைக்கக்கூடும் என்றும், அதனை உருக்குவதற்குரிய இன்றியமையாத் தேவையாக இருந்துவரும் நிலக்கரியும் அப்பகுதிகளில் அல்லது அவைகளுக்கு அருகில் தேவைக்கதிகமாகக் கிடைக்கக்கூடும் என்றும் காரணம் காட்டிவருகிறது. அதுவுமன்றி, அவ்வேற்பாட்டில் வட்டார பாகுபாட்டிற்குத்துளியும் ஆதாரம் கிடையாது என்றும் பேரரசு சமாதானம் சொல்லிவருகிறது.

இந்தியப் பேரரசு காட்டிவரும் இச்சமாதானத்தை உண்மையானது என்றே வைத்துக்கொள்வதானாலும், மேற்படி உருக்குத் தொழிற்சாலைகள் துவங்கப்பட்டுள்ள பகுதிகளில் வாழ்ந்துவரும் மக்கள் மேற்படி தொழிற்சாலைகள் துவங்கப்பட்டுள்ளதின் காரணமாக, இதுவரை என்றும் அவர்கள் பெற்றிலாத—புது வாழ்வு பெறமுடியும் எனக் கனவுகூட இதுவரை கண்டிராத அளவு புதுப்புது வேலை வாய்ப்புகளையும், அதன் பலனைப் புதுப்புது வாழ்க்கை வசதிகளையும் பெறப் போகின்றனர் என்பதை எவராலும் மறுக்க முடியாது.

இதுவரை வேலையின்றித் தேம்பித் தவித்தவர்கள், வாழ வகைகாணாது வாடிக்கிடந்தவர்கள், மாடுபோல் உழைத்து உருக்குலைந்து தேய்ந்திருந்தவர்கள், அரைவயிறு கால்வயிறு உண்பதற்கும் வக்கின்றி நொந்த வாழ்வு வாழ்ந்து வந்தவர்கள், மேற்படி மூன்று தொழிற்சாலை நிர்மாணத்தின் விளைவாக, புதுப்புது பணிகளைப் பெறப்போகின்றனர். புது வாழ்வெனும் மங்கை, அவர்களை மணக்க மணமாலையுடன் நெருங்குகிறாள்.

அப்பகுதிகளில் இதுவரை காடாகவும், வெறும் மண்மேடாகவும், பசுமை காணக் கட்டாந்தரையாகவும் கிடந்த நிலப்பரப்பு, முகமும் அகமும் மலர மக்கள் கூடிக்குலவும் புது வாழ்விடமாகக் காட்சி தர இருக்கிறது. ஆங்காங்கே மாட மாளிகைகளை இனி காணலாம். அங்காடிகள் பலப்பல அங்கெல்லாம் காட்சி தரும். அதிகம் கூறுவானேன்? நரியும் ஊளையிட்டறியாத அப்பகுதிகளில், இனி, வாழ்வைச் சுவைத்திடும் மனிதக் கூட்டத்தின் இதய அடித்தளத்திலிருந்து கிளம்பும் இன்பமூட்டும் இனிய நாதத்தை எப்பொழுதும் கேட்கலாம.

ரூர்கேலா, பிலாய், துர்காபூர் ஆகிய மூன்று இடங்களிலும், தொழில்கள் அனைத்துக்கும் தேவைப்படும் மூலத் தொழிலாக உள்ள உருக்குத் தொழில்களைத் துவங்கத் திட்டமிட்ட இந்தியப் பேரரசிற்கு வட்டாரப் பாகுபாடு துளியும இல்லை என்பது உண்மையென ஒப்புக்கொள்வதானாலும், அப்பகுதிகளில் மேற்படி தொழிற்சாலைகளைத் துவங்கியுள்ளதின் விளைவாக, அப்பகுதிவாழ் மக்களுக்கு நல்வாழ்வு வாழ இந்தியப் பேரரசு சிறந்த ஏற்பாடு செய்திருக்கிறது என்பதை நாம் மறந்துவிட முடியாது. தங்களுக்குப் புதுவாழ்வைத் தேடித் தந்துள்ளதின் காரணமாக, இந்தியப் பேரரசை அப்பகுதி மக்கள் வாழ்த்துவர்—பாராட்டுவர் என்பதிலும் ஐயமில்லை.

அரைவயிறு கால்வயிறு உண்ணுவதற்கே வகையில்லாது வாடிக்கிடந்த மக்களுக்கு முழுவயிறு உண்ண வகை தேடித் தரப்பட்டால், அப்படி வகை தேடித் தந்தவர்களை, அவர்களால் எப்படி வாழ்த்தாமல் இருக்கமுடியும்?

கட்டாந்தரையையே பஞ்சணையாய் — வானத்தையே கூரையாய்—கைகளையே தலையணையாய்—பெருங் காற்றையே போர்வையாய் நம்பி மிருகத்திலும் கேவலமாய் வாழ்ந்துவந்த மேற்கண்ட முப்பகுதி மக்களுக்கும், பணிபுரியும் வாய்ப்பு, கை நிறையப் பணம், வயிறு நிறைய உணவு, மானம்காக்கப்பகட்டான ஆடை, நல்ல குடியிருப்பு, மின்சார விளக்கு, குடிநீர், பாதை, பூங்கா, வானொலி இசை, படக்காட்சி என்ற முறையில் வசதிகளைச் செய்து தந்தால், அப்படி தங்களுக்கு வசதி செய்து தந்தவர்களை எவரால்தான் போற்றிப் புகழாமல் இருக்க முடியும்?

கடலில் பெருங்காயம் கரைக்கிறார்கள்!

வேலையற்றிருக்கும் பத்தாவது வகுப்புப் படித்தோர்க்கு வேலைதர உற்பத்தி நிலையமாம்!

புதுடில்லி, நவ. 25—

பத்தாவது வகுப்புப் படித்துவிட்டு வேலையற்றிருப்போருக்கு வேலைதருவதற்கென சென்னை நகரில் ஒரு உற்பத்தி நிலையத்தினை நிறுவ டெல்லி சர்க்கார் உத்தேசித்திருக்கிறதாம்!

கிண்டி தொழில் எஸ்டேட்டில் அமையும் இந்த நிலையத்தில் சுமார் 300 பேருக்கு வேலை கிடைக்குமாம்.

இதுபோல ஏற்கனவே கோவைத்தில் இரு நிலையங்கள் நிறுவ அனுமதிக்கப்பட்டிருக்கிறதாம்.

புதியதாக இப்போது சென்னை ஐதராபாத் மலபார் ஆகிய இடங்களில் ஒவ்வொன்று நிறுவ உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்.

ஒவ்வொரு நிலையமும் ரூ. 15 இலட்சம் செலவில் அமையுமாம்.

மாநிலத்திற்கு ஒன்று வீதம் இந்த நிலையங்கள் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

விவசாயிக்கு உதவி செய்வதில் இலாபமா?

சிந்திரி உரத் தொழிலில் ரூ. 4 கோடி இலாபம்

புதுடில்லி, நவ. 26—

சிந்திரி உர உற்பத்தி இலாபகரமாக நடைபெற்றுவருகிறது என்று 1957-ம் ஆண்டு அறிக்கை கூறுகிறது.

இந்த ஆண்டு மார்ச் திங்கள் வரை ரூ. 4,09,59 873 இலாபம் கிடைத்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டில் கிடைத்த ரூ. :68 இலட்சம் இலாபத்தில் பங்கிடு தரப்பட்டதாம்.

இந்த ஆண்டிற்கு 3,33,205 டன் உர உற்பத்தி அளவு என்று கணக்கிடப்பட்டுள்ளது.

மேலும் திட்டத்தை விரிவாக்க ரூ. 11 கோடி செலவிட முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

புதுடில்லி, நவ. 26—

தொழில் துறையில் அமைதி நிலவ வேண்டுமானால், பொறுப்புள்ள தொழிற்சங்கங்களும், முதலாளிகள் சங்கங்களும் ஏற்பட வேண்டும் என்றும், சிக்கல் ஏற்படும்போது அரசாங்க உதவியுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும் என்றும் உலகத் தொழிலாளர் நிறுவனத்தின் ஆசிய மண்டல மாநாடு வற்புறுத்திக் கூறியுள்ளது.

தமிழ் மக்கள்மீது டெல்லி காட்டிய கருணை!

புயலால் அவதிப்பட்டோருக்கு உதவ மாநில சர்க்காருக்குக் கடன் தந்ததாம்

புதுடில்லி, நவ 25—

“கடந்த 1955-ம் ஆண்டில் வீசிய தமிழ் நாட்டில் வீசிய புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக சென்னை சர்க்காருக்கு டெல்லி சர்க்கார் மிகுந்த கருணையோடு சுமார் ரூ. 3 கோடிவரை கடனாகத் தந்தனர்”

என்று, மாநிலங்கள் சபையில், நிதிமந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி தெரிவித்திருக்கிறார்.

காங்கிரஸ் ஆட்சியின் இலட்சணம்!

கட்சி உறுப்பினர்களே குறைகூறும் விந்தை!

போபால், நவ. 25—

மத்தியப் பிரதேச மாநிலத்தில் காங்கிரஸ் கட்சி அதிகாரம் செலுத்திவருகிறது. திரு. கட்ஜு முதலமைச்சராகவும், திரு. சர்மா கல்வி அமைச்சராகவும் பணியாற்றுகின்றனர்.

‘கல்வி இலாகா சரிவர இயங்கவில்லை’ என்று காங்கிரஸ் கட்சியினரே குற்றம் சாட்ட முனைந்துள்ளனர்.

தனியார் நடத்தும் கல்வி நிறுவனங்களுக்கு தக்க மானியத் தொகைகளை குறித்த காலத்தில் கல்வி இலாகா தரவில்லையென்று மாநில காங்கிரஸ் கட்சித் தலைவரும், சட்டமன்ற காங்கிரஸ் உறுப்பினர்களும், முதலமைச்சருக்கு முறையிட்டுள்ளனராம்.

‘இது மிகவும் வெட்கக்கேடானது’ என்று முதலமைச்சர், கல்வி அமைச்சருக்கு சுட்டிக் காட்டியுள்ளனராம்!

பல கல்லூரிகளையும், உயர் நிலைப் பள்ளிகளையும் காங்கிரஸ் உறுப்பினர்கள் நிர்வகித்து வருகின்றனராம். மானியத்தொகை தாமதப்படுத்தப்படுவதால் அவர்கள், ஆசிரியர்களுக்குரிய ஊதியத்தைத் தர முடியாத நிலையில் உள்ளாராம்.

கட்சிக் கூட்டத்திலும் இந்த அவலநிலையைப் பற்றிப் பேசியுள்ளனர். முதலமைச்சரின் சுற்றுப்பயணத்தின்போது உண்மையை எடுத்துரைத்துள்ளனர்.

கல்வி அமைச்சர் இந்தக் குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளார். அதிகாரிகளைக் கொண்டு விசாரணை நடத்தியதாக அவர் அறிவித்தார்.

அந்த விசாரணையில் நம்பிக்கை இல்லை என்று சில காங்கிரஸ் உறுப்பினர்கள் கூறியுள்ளனர்.

தொழிற் கட்சி

ஆட்சியைக் கைப்பற்றுமாம்

கட்சிப் பிரமுகர் தகவல்

சென்னை, நவ. 26—

புதுடெல்லியில் நடைபெற இருக்கும் பாராளுமன்ற மாநாட்டில் கலந்துகொள்ள பிரிட்டிஷ் தொழிற்கட்சிப் பிரமுகர் கார்டன் என்பார் வந்துள்ளார்.

இன்னும் இரண்டு ஆண்டுகளில் நடைபெற இருக்கும் தேர்தலில் தொழிற்கட்சி வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றும் என்றும், மத்தியக் கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்க ரஷ்யாவுடன் கலந்து பேசவேண்டும் என்றும், இஸ்ரேலுக்கும்—அரபு நாடுகளுக்கும் உள்ள பகையே இதற்கு மூல காரணம் என்றும், உலகம் முழுமையிலும் மக்களின் தேசிய விருப்பங்களை நிறைவேற்றுவது அகிலத்தின் அமைதிக்கு வழிகோலும் என்றும், செயற்கைச் சந்திரன் இராணுவ முக்கியத்துவம் பெற்றதல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உதவி கேட்பதிலும் இந்த நிலைமையா?

புதுடில்லி, நவ. 26—

ரூ. 1,000—அதற்கு அதிகமாக ஊதியம் பெறும் அதிகாரிகளிடம் உதவி கேட்க முன்வந்துள்ளது அரசாங்கம்!

அவர்களின் ஊதியத்தைக் குறைப்பது உகந்ததல்லவாம்; எனவே அந்த எண்ணம் கைவிடப்பட்டதாம்!

“இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக இந்த அதிகாரிகள், தங்கள் ஊதியத்திலிருந்து இயன்ற அளவு நன்கொடையளித்தால் அரசாங்கம் ஏற்கும்” என்றும் மக்கள் சபையில் அமைச்சர் கபீர் தெரிவித்துள்ளார்.

ரூ. 1·34 கோடி கள்ளத் தங்கம் கைப்பற்றப்பட்டதாம்

புதுடில்லி, நவ. 26—

இந்தியாவிலிருந்து வெளியே செல்லும் தங்கத்தைப் பற்றி இந்திய அரசாங்கத்திடம் தகவல் இல்லையாம்.

இந்த ஆண்டில், ‘ரூ. 1,34,28,417 மதிப்புள்ள கள்ளத் தங்கம் கைப்பற்றப்பட்டது என்று மட்டும் மக்கள் சபையில் அமைச்சர் பகத் தெரிவித்தார்.

மேத்தா குழு அறிக்கை எதிரொலி

பண்டிதரின் வேண்டுகோள்

புதுடில்லி, நவ. 26—

நாட்டின் உணவு நிலை பற்றி அசோக் மேத்தா குழு அளித்த அறிக்கையின் விளைவாக, பண்டித நேரு எல்லா மாநிலங்களுக்கும் வேண்டுகோள் ஒன்று விடுத்துள்ளார்.

உணவுத் தானிய உற்பத்தியை 150 இலட்சம் டன் அளவுக்கு இரண்டாவது திட்ட காலத்தில் அடைய வேண்டும் என்று அவர் வற்புறுத்தியுள்ளார்.

மேத்தா குழு அறிக்கையில், இந்த உற்பத்தி அளவை அடைய முடியாதென்றும், 100·3 இலட்சம் டன் மட்டுமே அதிகமாக உற்பத்தி செய்ய முடியும் என்றும் மதிப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது. இந்த அளவைக்கூட, இருக்கின்ற எல்லா வசதிகளையும் பயன்படுத்துவதின் மூலமே அடைய முடியும் என்று குழு கூறியுள்ளது.

மாநிலங்களின் தேவைக்கு ஏற்றவாறு அதிகப்படியான நிதி உதவியளிக்க மத்திய அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது.

சிறு நீர்ப்பாசனத் திட்டங்களை மாநிலங்கள் நிறைவேற்ற வேண்டும் என்று பண்டிதர் தெரிவித்துள்ளார்.

மாநிலங்கள் தேசிய விஸ்தரிப்புத்திட்டத்தை நிறைவேற்றுவதிலும், நல்ல சத்துள்ள விதை, உரம் தருவதிலும், தீவிர விவசாயத்திற்கு நீர்ப்பாசன வசதி ஏற்படுத்துவதிலும் அதிக அக்கறையும் தீவிரமும் காட்ட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கடன் வசதிகளை அதிகப்படுத்தியும், சிறு நீர்ப்பாசன வசதிகளைப் பாதுகாத்தும், உணவு உற்பத்திக்கு வேகமளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னை 17-வது வட்ட தி. மு. க. பொதுக்கூட்டம்

கி. மனோகரன், சத்தியவாணிமுத்து கலந்துகொண்டனர்

சென்னை 17-வது வட்ட (சூளை) தி. மு. கழகக் கிளையின் சார்பில் 18—11—57 மாலை 6-30 மணிக்கு ஆவடி சீனிவாச ஐயர் தெருவில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் இராதாமாணிக்கம் கே. டி. நித்தியானந்தம் ஆகியோரின் இன்னிசைக்குப்பிறகு கூட்டம் துவங்கியது.

தோழர் மு. கன்னியப்பன் அவர்கள் தலைமைதாங்கி கூட்டத்தின் நோக்கத்தையும், இன்றைய அரசியல் நிலையையும் குறித்து சிறிதுநேரம் பேசினார்.

அடுத்து தோழர் ஆர். ஜார்ஜ் அவர்கள் பேசுகையில், முதுகுளத்தூர் பிரச்சினையில் திராவிட முன்னேற்றக் கழகம் கடைப்பிடித்த தெளிவான—கண்ணியமான கொள்கைகளை விளக்கிவிட்டு, மாற்றுக் கட்சிகளெல்லாம் 'எரிந்த வீட்டில் பிடுங்கினவரை இலாபம்' என்ற கொள்கையிலே செயலாற்றிய விதத்தை விளக்கினார்.

அடுத்து தோழியர் சத்தியவாணிமுத்து எம். எல். ஏ. அவர்கள் பேசுகையில், முதுகுளத்தூர் பிரச்சினையில் மற்றக் கட்சிகள் நடந்துகொண்ட விதத்தையும், தி. மு. கழகம் நடந்துகொண்ட விதத்தையும் பல ஆதாரங்களுடன் விளக்கினார்.

இன்று முத்துராமலிங்கத் தேவருக்காக வக்காலத்து வாங்கி வருபவர்கள், பெரியாரைப் பார்த்து 'பைத்தியக்காரர்' என்றும், பெரியாருக்கு வயதாகிவிட்டதால் குரங்கு புத்தி வந்துவிட்டது என்றும் சொல்லும் வித்தையை எடுத்துக்காட்டி அவர்களுடைய போக்கை வன்மையாகக் கண்டித்தார்.

சூளையிலுள்ள ஆலை மூடப்பட இருப்பதால் 3,000 பேர் வேலை இழக்க நேரிடும் என்றும், இதைப் பற்றி மந்திரிகளைக் கேட்டால், அவர்கள் இதுகுறித்து எதுவும் செய்யக்கூடிய நிலையில் இல்லை யென்று சொல்லுவதாகவும் கூறி கண்டித்தார்.

தி. மு. கழகம்தான் இன்று உண்மையிலேயே ஏழைப் பாட்டாளி மக்களுக்குப் பாடுபடும் கட்சி என்பதைப் பல ஆதாரங்களுடன் எடுத்துக் கூறினார்.

இறுதியாகத் தோழர் கி. மனோகரன் அவர்கள் பேசுகையில், தி. மு. கழகத்தைப்பற்றி காங்கிரஸ்காரர்களும், அமைச்சர்களும், மற்றக் கட்சிக்காரர்களும் கேலியும் கிண்டலும் செய்வதைப்பற்றிக் குறிப்பிட்டு, அவர்களுக்கெல்லாம் பதில் சொல்லிக்கொண்டிருப்பது வீண் வேலை என்பதுடன், அவர்களைப் போலவே நாமும் அத்தகைய இழிசெயலில்—பண்பற்ற தன்மையில் இறங்கவிரும்பவில்லை யென்று, கூறிவிட்டு, தொடர்ந்து பேசுகையில், தேசிய கௌரவப் பாதுகாப்புச் சட்டம் என்னும் பேரால் ஒரு 'கழுத்தறுப்புச் சட்டம்' கொண்டுவந்திருக்கும் சென்னை அரசாங்கத்தை வன்மையாகக் கண்டித்தார்.

இப்படிப்பட்ட சட்டம் உலகில் எங்குமே இல்லாத ஒரு விநோதமான சட்டம் என்றும், இதை நிறைவேற்றியவர்களும் விநோதமான மனிதர்களே என்றும் குறிப்பிட்டார். இந்த விநோத நாட்டிற்குத்தான் இந்த விநோத சட்டம் தேவைப் படுகிறது என்றார்.

அவர் மேலும் பேசுகையில், 'அரசியல் சட்டம் உண்மையிலேயே புனிதமானதுதானா? இதற்கு என்ன ஆதாரம்?'-என்று கேட்டார்.

டாக்டர் அம்பேத்கார் அவர்கள் மாநிலங்கள் சபையில் பேசுகையில், 'அரசியல் சட்டம் களங்கப்படுத்தப்பட்டது' (It is nothnig but rapc) என்று குறிப்பிட்டதைச் சுட்டிக்காட்டி, இந்த அரசியல் சட்டம் பலமுறை களங்கப்படுத்தப் பட்டிருக்கிறது என்பதைத் தக்க ஆதாரங்களுடன் விளக்கினார்.

தேசியக் கொடியைவிட நாட்டிற்கு மிக முக்கியமானவர்கள் மக்கள்தான் என்றும், மக்கள் அந்தக் கொடியை எரிக்க முயல்கிறார்கள் என்றால், அவர்கள் அப்படிச் சொல்வதற்குக் காரணம் என்ன என்பதை ஆராய வேண்டுமே தவிர, சட்டம் போட்டு அடக்கிவிடலாம் எனக் கருதுவதாகாது என்றும், யாருடைய ஓட்டுகளால் பண்டித நேரு ஆட்சிக்குவர முடிந்ததோ அந்த மக்களை அலட்சியப் படுத்துவது தான் தேசிய கௌரவத்துக்கு இழுக்குத் தேடுவதாகும் என்றும அரசியல் சட்டத்தை எரிப்பவர்களை அடக்க புதிய சட்டமியற்றுவதைத் தவிர வேறு வழியே இல்லையா என்று வடநாட்டு ஆங்கிலப் பத்திரிகை யொன்று எழுதியிருப்பதைச் சுட்டிக்காட்டியும், மற்றும் பல ஆதாரங்களுடன் விளக்கினார்.

ஆச்சாரியார் அவர்கள் கவர்னர்-ஜெனரலாக இருந்த காலத்தில், அவரே, அரசியல் சட்டகர்த்தாவான டாக்டர் அம்பேத்கார் அவர்களிடம் இந்த அரசியல் சட்டம் பற்றி குறை கூறினார் என்றும், தென்னாட்டுக்கும்-வடநாட்டுக்கும் தனித்தனி கூட்டாட்சி (பெடரேஷன்)களாக அரசியல் சட்டம் வகுக்கப்பட்டு இரண்டுக்கும் பொதுவான ஒரு கூட்டாட்சி (கான்பெடரேஷன்) திட்டம் வகுக்கப்பட்டிருக்கவேண்டும் என்றும், அப்படி வகுக்காத வரை, இந்தி பேசும் ஆட்களே ஆதிக்கம் செலுத்தும்படியான நிலை ஏற்படும் என்றும் ஆச்சாரியார் அம்பேத்காரிடம் கூறியதாக எடுத்துக் காட்டினார்.

இறுதியில் தலைவர் முடிவுரையில் பேச்சாளர்களுக்கும், இந்தக் கூட்டத்தை மிகச்சிறப்புற நடத்த உதவிய தோழர்கள் சந்தானம், சண்முகம் ஆகியோருக்கும், மற்றவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

காங்கிரஸ் பேரவை

கூட்டம் கூடுவதற்குப் புதிய ஏற்பாடுகள்

கௌஹாத்தி, நவ. 25—

கௌஹாத்தியிலிருந்து 6 மைல் தூரத்தில் ஒரு இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்கு 'பிராக்ஜோதிஷ்பூர்' என்று பெயரிடப்பட்டு, அங்கு 63-வது காங்கிரஸ் பேரவைக் கூட்டத்தை 1958 ஜனவரி 12-ந் தேதியிலிருந்து 17-ந் தேதிவரையில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகிறதாம்.

காங்கிரஸ் தலைவர் 63 யானைகள் முன்செல்ல ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவாராம். பெரிய கண்காட்சி ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுவருகிறதாம்.

சேலம் கல்லூரியில் க. அன்பழகன்

22-11-57 மாலை 4½ மணிக்கு சேலம் நகராட்சி கல்லூரி தமிழ்க் கழகச் சார்பில் திருமதி அ. காமாட்சி குமாரசாமி தலைமையில் ஓர் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது; தோழர் க. அன்பழகன் எம். எல். ஏ. அவர்கள், 'மொழியும் வாழ்வும்' என்பது குறித்துச் சொற்பொழிவாற்றினார்.

சென்னை 16-வது வட்ட தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

என். வி. நடராசன், மு. கருணாநிதி, ஏ. கோவிந்தசாமி கலந்துகொண்டனர்

சென்னை, நவ. 18—

சென்னை, 16-வது வட்ட தி. மு. கழகக் கிளையின் சார்பில் 15—11—57 மாலை நம்புலய்யர் தெருவில் ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் சேலம்-சீனிவாசன் கே. டி. நித்தியானந்தம் ஆகியோரின் இன்னிசைக்குப்பின் கூட்டம் துவங்கியது.

தோழர் என். வி. நடராசன் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

தலைவர் தம் உரையில் தி. மு. கழகத்தின் மகத்தான வளர்ச்சி பற்றிக் குறிப்பிடுகையில், 'நம் கழகத்தை இனி யாராலும் அசைக்கமுடியாது' என்றுகூறி, அதற்கான சூழ்நிலைகளை விளக்கினார்.

தி. மு. கழகம் தென்னாட்டின் நலத்துக்காகப் பாடுபடும் ஒரே தேசிய இயக்கம் என்றும், இந்த இயக்கத்தை முன்பு எதிர்த்தவர்களெல்லாம் இன்று ஆதரிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது என்றும் கூறி, அனைவரும் கழகத்தில் சேர்ந்து, இப்பொழுது உள்ளதைவிட இன்னும் கட்டுப்பாட்டுடனும் உற்சாகத்துடனும் பாடுபட்டால் திராவிடநாடு மிக விரைவில் கிட்டுவது நிச்சயம் என்றும் எடுத்துரைத்து, இந்தித் திணிப்பைக் கண்டித்தார்.

அடுத்து, தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., அவர்கள் இந்தித் திணிப்பைக் கண்டித்தும், சட்டசபை நிகழ்ச்சிகளை விவரித்தும் சிறிதுநேரம் பேசினார்.

இறுதியாக தோழர் மு. கருணாநிதி எம். எல். ஏ., அவர்கள் பேசினார். (பேச்சு பின்னர் வெளிவரும்)

தோழர் கருணாநிதி அவர்களுக்கு ஓட்டல் தொழிலாளர்கள், ஸ்டேண்டர்ஸ் பாக்குத்தூள் கம்பெனிதொழிலாளர்கள், சிறுமி ஹேமலதாதேவி ஆகியோர் மாலைகள் அணிவித்தனர். மற்றும் வட்ட மக்கள் மன்றச் சார்பிலும் கிளைக் கழகச் சார்பிலும் தலைவருக்கும், பேச்சாளர்களுக்கும் கைத்தறியாடைகள் அணிவிக்கப் பட்டன.

தோழர் கருணாநிதி அவர்களின் நீண்ட உரைக்குப்பின் நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

மிக நெருக்கடியான இடத்தில் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தும் கட்டுக்கடங்காத அளவில் ஏராளமான மக்கள் கூடியிருந்து பேச்சுக்களைக் கேட்டனர்.

'ஏழைகளுக்கான மருத்துவச் செலவை சர்க்கார் தரவேண்டும்'

டாக்டர் சந்தோஷம் கருத்துரை

கோவை, நவ. 25—

"டாக்டர்கள் சங்கத்தை, தொழிற்சங்கமாகக் கருதிவருகின்றனர்; இந்தக் கருத்து தவறானதாகும்.

"ஏழை மக்களுக்கு அளிக்கப்படும் மருத்துவ வசதிக்கான செலவை டாக்டர்களுக்கு அரசாங்கம் தரமுன்வரவேண்டும்.

"நவீன மருத்துவ முறையை போதிய மருந்துகள் இல்லாத காரணத்தினால் அளிக்கமுடியாத நிலை உள்ளது.

"உள்நாட்டு மருத்துவ முறையை தரமுள்ளதாகச் செய்வதில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும்"

என்று, டாக்டர் எம். சந்தோஷம் டாக்டர்கள் மாநாட்டிற்குத் தலைமை வகித்துப் பேசும்போது குறிப்பிட்டுள்ளார்.

சிந்து நதி தண்ணீர் தகராறு

உலக பாங்கி முயற்சி

புதுடில்லி, நவ. 26—

சிந்து நதித் தண்ணீர் பற்றி இந்தியாவுக்கும்-பாகிஸ்தானுக்கு மிடையே உள்ள தகராறை தற்காலிகமாகத் தீர்க்க உலக பாங்கி பிரதிநிதிகள் முயற்சித்துவருகின்றனர் என்று மக்கள் சபையில் அமைச்சர் செயசுக்லால் தெரிவித்துள்ளார்.

டாக்டர்கள் ஊதியம்

எல்லா மாநிலங்களிலும் ஒரே மாதிரியாக இருக்கவேண்டும்

புதுடில்லி, நவ. 25—

அரசாங்க வேலையில் ஈடுபட்டுள்ள டாக்டர்களின் ஊதியம் எல்லா மாநிலங்களிலும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டுமென்று [illegible] ஊதியக் குழுவிற்கு, [illegible] குழு சிபாரிசு செய்துள்ளது.

டாக்டர்களின் ஆரம்ப அடிப்படை ஊதியம் அதிகமாக நிர்ணயிக்கப்பட வேண்டும் என்றும கூறப்பட்டுள்ளது.

ஆசிரியர் நிலையை உயர்த்துவதில் மாநிலங்களின் அலட்சியப் போக்கு

காங்கிரஸ் செயலாளரே இடித்துக் காட்டுகிறார்

ஐதராபாத், நவ. 25—

"இந்தியாவின் பல மாநில அரசாங்கங்கள், ஆசிரியர்களின்—அதிலும் குறிப்பாக ஆரம்ப, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களின் பொருளாதார—சமூக நிலையை உயர்த்தத் தீவிர கவனம் செலுத்தவில்லை. வருங்கால இளைஞர்களை உருவாக்கும் ஆக்கப்பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களை முதலில் கவனிக்கவேண்டும்"

என்று காங்கிரஸ் பேரவையின் பொதுச் செயலாளர் ஸ்ரீமன் நாராயணன், உஸ்மானியப் பல்கலைக் கழகப் பட்டதாரிகளிடையே பேசுகையில் தெரிவித்துள்ளார்.

ஒரிசாவில் பயிர்கள் நாசமடைந்துவிட்டன

ஆராய டெல்லி முற்பட்டுள்ளது

புவனேஸ்வர், நவ. 25—

பருவமழை இல்லாத காரணத்தினால் ஒரிசா மாநிலத்தில் பயிர்கள் நாசமடைந்துள்ளன. 50, 60 சதவிகிதம் அளவில் விளைச்சல் பாதிக்கப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அறுவடையின்போது 20 இலட்சம் டன் அரிசி கிடைக்கலாம் என்று கருதப்பட்டுள்ளது.

ஒரிசா மாநிலத்தின் உணவு நிலைபற்றி ஆராய மத்திய அரசாங்க நிபுணர்கள் ஒரிசாவுக்கு வந்துள்ளனராம். மத்திய அரசாங்கம் கோதுமை தானியம் தரக்கூடும் என்று கருதப்படுகிறது.

'அடிப்படை ஊதியம் உயர்த்தப்படவேண்டும்'

புகைவண்டி நிலைய அதிகாரிகள் மாநாட்டில் தீர்மானம்

சென்னை, நவ. 26—

புகைவண்டி நிலைய அதிகாரிகளின் அடிப்படை ஊதியம் மாதம் ரூ. 260-க்கு உயர்த்தப்படவேண்டும் என்று இந்தியப் புகைவண்டி நிலைய அதிகாரிகள் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

144 தடைச் சட்டம்

கைவிட மக்களசபையில் தீர்மானம்

புதுடில்லி, நவ. 25—

"கூட்டங்கள், ஊர்வலங்கள் முதலியவற்றைத் தடுக்க இப்போது கி. பி. கோ. 144 பிரிவு பயன்படுத்தப்படுவதைக் கைவிட வேண்டும்"

என்று மக்கள் சபையில், சோஷலிஸ்டு உறுப்பினரொருவர் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்தார்.

பரவும் வியாதிகளிடமிருந்து சமுதாயத்தைக் காக்க நெருக்கடியான நேரத்தில் பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்தச்சட்டம் உருவாக்கப்பட்டது என்றும், ஆனால் இப்போது அரசாங்கம் இந்தச் சட்டத்தை அரசியலுக்குப் பயன்படுத்திவருவது இழுக்காகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மறைவு

22—11—57-ல், நெல்லிக்குப்பம் கழகத் தோழர் பி. ஜிக்கரியா அவர்கள் அரசினர் மருத்துவமனையில் இயற்கையெய்தினார்,

சவ அடக்கத்தின்போது இயக்கத் தோழர்கள் பெரும்பான்மையோர் கூடி இருந்தனர். அச்சவ அடக்கத்திற்கான செலவுகளை கழகம் மேற்கொண்டு ஆவன செய்தது.

அன்றுமாலை கழகத்தின் பொது உறுப்பினர் கூட்டத்தில் இறந்த தோழருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு அனுதாபத் தீர்மானம் ஒன்றும் நிறைவேறியது.

* * *

மன்னுடிமங்கலம் தி. மு. க. செயலாளரின் உறவினரும், ஊராட்சிமன்ற உறுப்பினருமான இ. காசி (சேர்வை) அவர்கள் 21—11—57-ல் இயற்கையெய்தினார்; சவ அடக்கத்தின்போது கிளைக் கழகச் செயலாளர் பெ. நெடுஞ்செழியன் தனது இறுதி மரியாதையைத் தெரிவித்துக் கொண்டார்; மன்னுடிமங்கலம் தி. மு. கழகம் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக்கொள்கிறது.

* * *

14—11—57-ல், சோழக்கூர் தி. மு. க. செயலாளர் டி. பி. வேலு அவர்களின் தமையனார் பி. காசிராசன் அவர்களும், 21—11—57-ல், தோழர் டி. கோவிந்தராசன் அவர்களும் இயற்கையெய்தியமை குறித்து சோழக்கூர் தி. மு. க. சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

* * *

தி. மு. கழகப் பொதுக்குழு உறுப்பினரும், மாயூரம் நகர தி. மு. க. செயலாளருமான தோழர் என். கிட்டப்பா அவர்களின் தந்தை திரு. நடேசனார் அவர்கள் 19—11—57-ல் இயற்கையெய்தினார் என்ற செய்தியை மாயூரம் நகரக் கழகத்தினர் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றனர்.

தமிழ் நாட்டின் அடுத்த கவர்னர்

அசாம் முதன்மந்திரியா ?

புதுடில்லி, நவ. 26—

தமிழ்நாட்டின் அடுத்த கவர்னராக அசாம் முதன் மந்திரியாயிருக்கும் பிஷ்ணுராம் மெஹ்தி நியமிக்கப்பட்டிருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் கூறுகின்றனவாம்!

மெஹ்தியின் நியமனம்பற்றிய பேச்சுவார்த்தைகள் முடிந்துவிட்டன என்றும், இதுபோன்ற பெரிய பதவிகளுக்கு நியமனம் இறுதி நேரத்தில்கூட மாறலாம் என்றாலும், இப்போதைக்கு மெஹ்திதான் என்பது முடிவாகிவிட்டது என்றும் கூறப்படுகிறது.

மெஹ்தி, இப்போது உடல்நலக் குறைவால், திப்ருகரில் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்று வருவதாகவும் கூறப்படுகிறது.

இந்தித் திணிப்புக் குழுவின் அறிக்கை

பாராளுமன்ற பரிசீலனை குறித்து தத்தார் பதில்

இந்தித் திணிப்புக் குழுவின் அறிக்கையைப் பரிசீலிப்பதற்காக நிறுவப்பட்டுள்ள பாராளுமன்ற கட்டுக் குழுவின் அடுத்த கூட்டம் சனவரியில் நடைபெறுமென்றும், கூடிய விரைவில் குழுவின் பரிசீலனை நடைபெறுமென்றும் மக்கள் சபையில் உள்நாட்டு இலாகா மந்திரி தத்தார் தெரிவித்தார்.

பல துணைக் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அவர், அடுத்து நடைபெறும் கூட்டங்களில் பத்திரிகையாளரை அனுமதிப்பதுபற்றி குழுவினரே முடிவு செய்வர் என்றும் கூறினர்.

"பாராளுமன்றக் குழுக் கூட்டங்களில் அம்மன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட வேண்டுமென்பது முறையல்லவா ?" என்று கேட்கப்பட்டபோது, சபைத் துணைத் தலைவர், 'அதுபோல விதி இருந்தால் பின்பற்றப்படும்' என்று கூறினர்.

"குழுவின் அறிக்கையை மக்கள் சபை விவாதிக்க அனுமதிக்கப்படுமா ?" என்று கேட்டபோது, அமைச்சர் தத்தார் 'இவ்வளவு சீக்கிரத்தில் அதைக் கூறிவிட முடியாது' என்று கூறியுள்ளார்.

ரூ.1,60,000 பெறுமான தங்கம் பிடிபட்டது

மலபார் கடற்கரையருகே போலீஸ் சோதனை

கோழிக்கோடு, நவ. 26—

இந்தியாவிற்குள் கள்ளத்தனமாக கடத்தப்பட்டு வரும் தங்கம் நாளும் அதிகரித்து வருகிறது.

இங்கிருந்து பத்து மைல் தொலைவிலுள்ள கப்பாதி என்னும் இடத்தில் சுங்க இலாகா அதிகாரிகள் ரூ. 1,60,000 பெறுமான 1,590 தோலா கள்ளத் தங்கத்தைக் கைப்பற்றினர். தங்கம் கடலுக்கடியில் ஒரு பாறை அருகே ஆழமாகப் புதைக்கப்பட்டிருந்ததாம். நீர் மூழ்குவதில் கெட்டிக்காரர்களாகவுள்ளவர்கள் இதனை தோண்டி எடுத்திருக்கின்றனர்.

மலபார் கடற்கரையில் தங்கம் புதைக்கப்பட்டு பிடிபடுவது இது தான் முதல் முறையாம்.

தஞ்சை மாவட்ட பஸ், லாரி தொழிலாளர் சங்கக் கூட்டம்

30—11—57 இரவு 7 மணியளவில், பட்டுக்கோட்டை செட்டியார் பில்டிங்ஸ் மாடியில், தஞ்சை மாவட்ட பஸ், லாரி தொழிலாளர் சங்க உறுப்பினர்கள் பொதுக் கூட்டம் நடைபெறும்; அது போது தொழிலாளர் சம்பளப் பிரச்சினை குறித்து முடிவுகள் செய்ய வேண்டியிருப்பதாக மேற்படி சங்கச் செயலாளர் ஏ. டி. ராமப்பன் அறிவிக்கிறர்.

கழகத் தலைவர்களுக்கு வரவேற்பு

ஆம்பூர் நகரசபையில் தீர்மானம்

ஆம்பூர் (வ. ஆ), நவ. 27— அண்ணா அவர்களுக்கும் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், க. அன்பழகன், மு. கருணாநிதி, பா. பா. சாரதி, சி. பி. சிற்றரசு ஆகியோருக்கும் வரவேற்பு அளிக்க வேண்டுமென்று, 21—11—57ல் நடந்தஆம்பூர் நகராண்மைக் கூட்டத்தில் தோழர் ஆர். சம்பங்கி கொண்டுவந்த தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

பம்பாய் மெயில் விபத்து

உயர் அதிகார விசாரணை குழு நியமிக்கப்படும்

மக்கள் சபையில் பண்டிதர் அறிவிப்பு

புதுடில்லி, நவ. 26—

"பம்பாய் மெயிலுக்கு, சடந்த சனியன்று ஏற்பட்ட விபத்து பற்றி விசாரணை நடத்த ஒரு உயர் அதிகாரம் படைத்த சுயேச்சையான விசாரணைக் குழு நியமிக்கப்படும்"

என்று பண்டித நேரு, மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறர்.

சில உறுப்பினர்கள், நிபுணர்களைக் கொண்டோ, அல்லது மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டோ விசாரணை நடத்த வேண்டுமெனக் கேட்டிருக்கின்றனர்.

"இப்போதைக்கு குழுவில்யார் யார் இடம் பெறுவார்களென்பதைச் சொல்லமுடியாவிட்டாலும் அது ஒரு இலாகா பூர்வமான விசாரணையாக இருக்காது —உயர் அதிகாரம் படைத்த சுயேச்சையான குழுவாக இருக்கும்" என்றும் பண்டிதர் கூறியிருக்கின்றர்.

"இரயில்வே மந்திரி ஒரு உயர் நீதிமன்ற நீதிபதியைக்கொண்டு விசாரணை நடைபெறுமென்று அறிவித்திருந்தார்; ஆனால், எல்லா நேரங்களிலும் இது போன்ற விசாரணைகளில் நீதிபதிகளே இருக்கவேண்டியதில்லை" என்றும் பண்டிதர் கூறியுள்ளார்.

இந்த அறிவிப்பிற்கு முன்பாக, பெரோஸ் காந்தி, முன்னைய இரயில் விபத்துக்கள் பற்றிய விசாரணைக் குழுவின் அறிக்கையை மக்கள் சபையில் முழுவதுமாக விவாதிக்கவேண்டுமெனக் கோரியதை சபைத் தலைவர் ஏற்றுக்கொண்டார்.

இரயில் விபத்து

சந்தேகத்தின்பேரில் ஐந்துபேர் கைது

நாசிக், நவ. 26—

பம்பாய்-கல்கத்தா மெயிலுக்கு இசத்பூரி அருகே ஏற்பட்ட விபத்தினை ஒட்டி, நாசிக் போலீசார் 5 நபர்களைக் கைது செய்திருப்பதாகத் தெரிகிறது.

வழக்கு நடைபெற்ற இடத்துக்கு அருகே உள்ள மக்னு, கவனியா என்ற கிராமங்களைச் சேர்ந்தவர்களாம் அவர்கள்.

விசாரணை அறிக்கை !

'தாமதமின்றி சபையில் வைக்க வேண்டும்'

அமைச்சர்களுக்கு மக்கள்சபை தலைவர் அறிவிப்பு

புதுடில்லி, நவ. 26—

"பெரிய விபத்துக்களைப் பற்றி அரசாங்கம் விசாரணை அறிக்கைகளைத் தாமதமில்லாமல் மக்கள்சபையில் வைக்க வேண்டும்"

என்று, மக்கள்சபைத் தலைவர் அனந்தசயனம் அய்யங்கார், இந்திய அரசாங்க அமைச்சர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

விபத்துக்களைப் பற்றிய அறிக்கையை அரசாங்கம் அளிப்பதில்லை என்பதை, சபையில், திரு. பெரோஸ் காந்தி எடுத்துரைத்தார்.

குறித்த நேரத்தில் அமைச்சர்கள் வராததால் !

சட்ட மன்ற நடவடிக்கைகளைத் தள்ளிப்போட்டனராம்!

காங்கிரஸ் ஆளவந்தார்களின் அவலட்சணப் போக்கு !

பாட்னா, நவ. 25—

சாதாரணமாக மாநில சட்ட மன்றங்களிலும், மக்கள் சபையிலும் அமைச்சர்கள் தவறாது வந்திருந்து நிகழ்சிகளில் கலந்து கொள்வது நாகரீக அரசியல் முறையாகும்.

அமைச்சர்களுக்கு வேலைப் பளு அதிகமிருந்தாலும், சட்ட மன்றக் கூட்டங்களில் கலந்துகொள்ளத் தவறாமலிருப்பதே சனநாயகத்திற்குரிய பண்பாகும்.

மக்கள் சபையில் சட்ட அமைச்சரும், துணைக் கல்வி அமைச்சரும், தங்களுக்குப் பதில் பாராளுமன்ற அமைச்சரை பணியாற்றக் கேட்டுக்கொண்டுள்ளனர்; அதை, பாராளுமன்றத் தலைவர் கண்டித்துள்ளார்.

இதேபோன்று, பாட்னாவில், கடந்த வியாழக்கிழமை அன்று நடைபெற்ற சட்ட மன்றக் கூட்ட நிகழ்ச்சிக்கு குறித்த நேரத்தில் ஒரு அமைச்சர்கூட வரவில்லையாம்! சட்ட மன்ற நடவடிக்கைகளை 20 நிமிடங்கள் தள்ளிப்போட வேண்டியதாயிற்றும் !

சட்டமன்றத்தின் நிகழ்ச்சிகள் —அதிலும் விவாதங்கள் அமைச்சர்களுக்குப் பயன்படாதபோது, அதுபற்றி எதிர்க்கட்சிகள் விவாதிப்பதால் பயனில்லை என்ற நியாயமான காரணத்தினால் சட்ட மன்றம் இயங்குவதற்குத் தேவையான உறுப்பினர்கள் வந்திருந்தும், நடவடிக்கைகள் துவக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

மக்கள் ஆதரவு பெற்றவுடன், பதவியில் அமர்ந்துவிடும் காங்கிரஸ் ஆளவந்தார்களின் போக்கு எந்த அளவுக்குப் பொறுப்பு உணர்ச்சியுடன் நடத்தப்படுகிறது என்பதற்கு இவை போதிய சான்றாகும்.

கைத்தறி ஏற்றுமதியில் குறைபாடுகள்

ஏடன் தூதுவரிடம் முறையீடு

சென்னை, நவ. 26—

சென்னை மாநில கைத்தறி வியாபாரிகள் சங்கத் தலைவர் திரு. எம். எஸ். ஏ. மஜீத் தலைமையில, ஏடனுக்குக் கைத்தறித் துணி ஏற்றுமதி செய்யும் வியாபாரிகள தூதுக் குழு ஒன்று சென்று, ஏடனில் இந்தியத் தூதுவராக உள்ள திரு. சகத் சிங்கிடம் ஏற்றுமதியிலுள்ள குறைகளை எடுத்துக் கூறியுள்ளது.

ஏடனில் கைத்தறி இறக்குமதியாளரின் நிலையைப் பற்றிய தகவல்களை இங்குள்ள கைத்தறி ஏற்றுமதியாளருக்கு அவ்வப்போது தெரிவிகக இந்தியத் தூதுவர் ஒப்புக்கொண்டார்.

தூதுவர் அலுவலகத்தில் விதவிதமான கைத்தறித் 'துணிகளை கண்காட்சியில் வைக்கவும் அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

ஏடனில் கப்பல் போக்குவரத்தை அதிகப்படுத்தத் தகக ஏற்பாடுகள் செய்வதற்கும் அவர் இசைந்துள்ளார்.

"திராவிட ஆட்சி முறை 333"

'எத்தகைய கேள்விக் கணைக்கும் விடை கூறும் நூல்'
என அறிஞர் அண்ணா பகரும் நன்னூல்!

★ நெடுஞ்செழியனின் மதிப்புரையைப் பெற்றது
★ திராவிடத்தின் பிரிவினைக்கு வழி வகுப்பது
★ திராவிடர்தம் எதிர்கால வாழ்வமைப்பைக் கூறுவது

ஒவ்வொரு திராவிடர் கையிலும் இருக்கவேண்டிய இலக்கிய ஏடு !
நல்ல எளிய — இனிய 333 வெண்பாக்கள் அடங்கியது
'திருக்குறள் ஆட்சி' ஆசிரியர் அரங்கசாமி அவர்கள் இயற்றியது

விலை ரூ. 1. — பக்கம் 92.

கிடைக்குமிடம் : திருக்குறள் பதிப்பகம், இராசிபுரம் (சேலம்)

கலைவாணர் என். எஸ். கே.

50-வது பிறந்தநாள்விழா

மறைந்த கலைவாணர் என். எஸ். கே. அவர்களின் 50-வது பிறந்தநாள் விழா 28—11—57 அன்றுமாலை சென்னை ஒற்றைவாடை தியேட்டரில் நடைபெறும்; விழாவில் என். எஸ். கே. நாடக சபையினர் நடிக்கும் 'தளபதி' என்னும் நாடகம் நடைபெறும். தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் என் எஸ். நாராயண பிள்ளை தலைமை தாங்குவார்; எம். ஜி. இராமச்சந்திரன், கே. ஆர். இராமசாமி, எஸ். எஸ். இராசேந்திரன், சிவாஜி கணேசன், சகஸ்ரநாமம், அஞ்சலி தேவி முதலியோர் கலந்து கொள்வர்.

கழகக் கூட்டம்

★

கோபிசெட்டிபாளையம்

பெரியார் திடலில்
28—11—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : கா. பெ. துரை
பேசுவோர் :
மு. கருணாநிதி எம்.எல்.ஏ.
ஜி. என். இராசு

பட்டுக்கோட்டை தி.மு.க. மாணவர் கிளை பொதுக்கூட்டம்

29—11—57 மாலை 6 மணிக்கு பட்டுக்கோட்டையில் தோழர் உ. கணபதிராமசுப்பையா தலைமையில் தோழர்கள் என். வி. நடராசன், கோபாலகிருட்டினன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சொற்பயிற்சிக் கூட்டம்

28—11—57 இரவு 8 மணிக்கு சென்னை 47-வது வட்ட தி.மு.க. சார்பில் தியாகராய நகர் மதிவளர் மன்றத்தில் தோழர் கு. எழிலன தலைமையில் 'மதமும் மூடநம்பிக்கையும்' என்ற பொருள் குறித்துப் பலர் சொற்பொழிவாற்றுவர்.

துருப்பிடிக்காத உருக்கு

புதிய முறையில் தயாரிக்க தொழிற்சாலை நிறுவப்படும்?

ஜாம்ஷெட்பூர், நவ. 26—

விலை உயர்வான 'நிக்கல்' உலோகத்திற்கு மாறாக, புதிய முறையில் துருப்பிடிக்காத உருக்கு ஒன்றைத் தயாரிக்கும் புதிய முறையை தேசிய உலோக ஆராய்ச்சி நிலையம் கண்டுபிடித்துள்ளதாம்.

இதற்கான தொழிற்சாலையை நிறுவ ரூ. 1 கோடி செலவாகும்; இதன்மூலம் ரூ. 10 கோடி அந்நியச் செலாவணி மிகுதியாகும்.

தற்போது இந்தியாவில் ஆண்டுதோறும் 7,000 டன்கள் துருப்பிடிக்காத உருக்கு இறக்குமதி செய்யப்படுகிறதாம்.

கேட்டீரா, சேதி !

வாஷிங்டன், நவ. 26—

சூறாவளி வருவதை முன்கூட்டியே வெகு நுணுக்கமாகக் கண்டுபிடிக்கக்கூடிய ஒரு கருவியை அமெரிக்க இராணுவ நிலையம் கண்டுபிடித்துள்ளதாம்.

காணவில்லை

எனது மருமகன் கே. நாராயணசாமி என்பவர் 3 ஆண்டுக் காலமாக புத்தி சுவாதீனமில்லாமலிருந்தவர்—சென்ற 1 மாதத்திற்கு முன்பு வீட்டிலிருந்தவர் எங்கேயோ சென்றுவிட்டார். பல இடங்களில் தேடியும் காணவில்லை; அவரைக் கண்டவர்கள் என் முகவரிக்குத் தெரிவிக்குமாறு வணக்கத்துடன் கேட்டுக் கொள்கிறேன். நிறம்—சிவப்பு; வயது—35; உயரம் 5½ அடி; தலை—கிராப்பு அடையாளமுள்ளவர்.

கே. கே. நீலமேகம்,
மும்மூர்த்தி விநயகர்
சுருட்டு கம்பெனி, கும்பகோணம்.

க. அன்பழகன்

எம்.எல்.ஏ. சுற்றுப்பயணம்

நவம்பர்

29 : மாலை 5 மணி - காட்டூர் (திருவாரூர்) புதிய சாலைத் திறப்பு விழா
இரவு 7-30 மணி-மேட்டுப் பாளையம்(திருத்துறைப்பூண்டி) ஊராட்சி மன்றத்தில் அண்ணா படமும் வானொலிப் பெட்டியும திறப்பு

30 : மாலை 5 மணி - காரைக்குடி பொறியியல் கல்லூரி கலைவிழா
மாலை 6 மணி-பாதரக்குடி கழகக் கிளை துவக்க விழா
இரவு 7-30 மணி-புதுப்பட்டி (திருப்பத்தூர்) கழகக் கிளை துவக்க விழா

டிசம்பர்

1 : காலை 8 மணி-பழனி திருமணம்
மாலை 5 மணி - சித்தையன் கோட்டை கழக ஆண்டு விழா
இரவு 7-30 மணி-திண்டுக்கல் பொதுக்கூட்டம்

பெங்களூரில் என். எஸ். இளங்கோ நிகழ்ச்சிகள்

நவம்பர்

30 : சிவன்செட்டி வட்டம் — தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

டிசம்பர்

1 : மக்கள் படிப்பகச் சார்பில் 'சிக்கலால் பாக்'லில் பொதுக் கூட்டம்
2 : சித்தல்துர்க் மாவட்டத்தைச் சேர்ந்த இரியூரில் தி.மு. கழகப் பொதுக்கூட்டம்
3 : கோலார் தங்கவயல் — பொதுக்கூட்டம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக தமிழ் மன்றக் கூட்டம்

28—11—57 மாலை 4-30 மணிக்கு, அண்ணாமலைப் பல்கலைக் கழக, கோகலே மண்டபத்தில், பேராசிரியர் தேவநேயப்பாவணர் அவர்கள் தலைமையில் புலவர் அறிவுடைநம்பி 'மொழிச் சிக்கல்' என்னும் பொருள் பற்றிப் பேசுவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.